## ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)

Since 1951

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020. தமிழ்நாடு, இந்தியா

பொருண்மை :

## பன்முகத் தளத்தில் தமிழியல்

நாள் : 28.11.2019 (வியாழக்கிழமை)

UGC

### முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி *மற்றும்*
### அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
### தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் *இணைந்து*

பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்

– பன்னாட்டுக் கருத்தரங்கம் –

## வளநபர்ச் சான்றிதழ்

திரு. / திருமதி / செல்வி க. ஷைலவன், உதவிப் பேராசிரியர் அவர்கள்

அகநானூற்றில் பதுக்கை என்னும் தலைப்பில்

கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| முனைவர் க. சிராஜுதீன் | முனைவர். அ. சையத் ஜாகிர் ஹசன் | முனைவர் S. இஸ்மாயில் முகைதீன் |
| கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் & செயலாளர் | தமிழ்த்துறைத்தலைவர் (பொ) கலைப்புல முதன்மையர் | முதல்வர் |

சிறப்பிதழ்
Special Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

## Journal of
# Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr.A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R.Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி–620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்
**பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019**

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி –620 020.

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

6 பகுதி-9
சிறப்பிதழ்
Special Issue

மற்றொன்று:

நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Modern Thamizh Research

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN : 2321 - 984X

# அகநானூற்றில் பதுக்கை

க. ஹைலன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் அகம் என்ற பெயரால் அமையக்கப்பெறும் நூல் அகநானூறு. நெடுந்தொகை என்னும் சிறப்புப் பெயரைக் கொண்ட அகநானூறு அகம் சார்ந்த 400 பாடல்களின் தொகுப்பு. இத்தொகுப்பில் இறந்துபட்ட உடலங்களைத் தற்காலிகமாக அடக்கம் செய்யும் முறையான பதுக்கை தொடர்பான செய்திகள் கூறப்பட்டுள்ளன. பாலைத்திணையில் கூறப்பட்டுள்ள பதுக்கை பற்றிய செய்திகளை 'அகநானூற்றில் பதுக்கை' என்னும் தலைப்பில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதுக்கை – சொல் விளக்கம்:

பதுக்கை என்பதற்கான சொல் விளக்கத்தினை நிகண்டுகளும் அகராதிகளும் பின்வருமாறு தெரிவிக்கின்றன.

"அரிலே, பதுக்கை, சிறுதூறாகும்."

"பதுக்கை, சிறுதிட்டை."

என்று திவாகர நிகண்டும்,

"பாறை, கற்குவியல், புதர்." (நர்மதாவின் தமிழ் அகராதி, ப.577)

"கற்குவியல், மணற்குன்று, பாறை" (தம்பியின் தமிழ் அகராதி, ப.255)

"சிறுதிட்டை, சிறுதூறு, பாறை, கற்குவியல்" (கழகத் தமிழ் அகராதி, ப.643)

என்று அகராதிகளும் கூறுகின்றன.

சங்க இலக்கியத்தில் கூறப்படும் பதுக்கைகளுக்கும் தொல்லியலாளர்களால் கட்டப்படும் பதுக்கைகளுக்கும் மிகுதியான வேறுபாடுகள் உள்ளன. இதனை,

"தொல்லியலாளர்கள் குறிப்பிடும்
பெருங்கற்படைச் சின்னங்களைச் சங்க
இலக்கியப் பதுக்கைகளோடு தொடர்பு
படுத்துவது பொருத்தமற்றதாகவோ உள்ளது
இவ்விரு பதுக்கைகளுக்குமிடையில்
பெருத்த வேறுபாடுகள் உள்ளன. சங்க
இலக்கியங்கள் குறிப்பிடும்

பதுக்கைகள் கொல்லப்படும் வழிப்போக்கருக்காக அமைக்கப்படுபவை. அதாவது பிணங்களுக்குத் தரப்பெற்ற குறைந்தபட்ச மரியாதை. வழியில் கொல்லப்பட்டவர்களின் பிணங்களை விலங்குகள் பறவைகள் உண்ணாமல் தடுப்பதற்காகச் செய்யப்படும் ஓர் ஏற்பாடு. ஆனால் பெருங்கற்படைப் பதுக்கைகள் அப்படியன்று ஆவை நிலையான நிலைத்த சின்னங்கள். எனவே சங்க இலக்கியப் பதுக்கைகளைப் பரல் பதுக்கைகள் என்றும், பெருங்கற்படைப் பதுக்கைகளைக் கற்பலகைப் பதுக்கைகள் என்றும் அடையாளப்படுத்துவது பொருத்தமுடையதாக அமையும்." (இலக்கிய இனவரைவியல், ப.95) என்று முனைவர் ஞா.ஸ்டீபன் கூற்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

அகநானூற்றில் பதுக்கை தொடர்பான பதிவுகள்:

13 முதல் 31 அடிகளைக் கொண்டு அமைந்துள்ள அகநானூற்றுப் பாடல்கள் மூன்று பெறும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை களிற்றியானை நிரை (1 – 120), மணிமிடைபவளம் (121 – 300), நித்திலக்கோவை (301 – 400). இதில் களிற்றியானை நிரையில் அம்மூவனார்(35), நோய்பாடியார்(67), மாமூலனார்(91), கடுந்தொடைக் காவினார்(109) என்னும் புலவர்களும் மணிமிடைபவளத்தில் காவன் முல்லைப்

பூதத்தனார்(151), வேம்பற்றூர்க் குமரனார்(157), இறங்குகுடிக் குன்ற நாடன்(215), மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் (231), எயினந்தை மகன் இளங்கீரனார்(289) என்னும் புலவர்களும் பதுக்கை தொடர்பான செய்திகளைக் கூறியுள்ளனர்.

**பதுக்கையின் அமைவிடம்:**

பாலை நிலத்தில் மறவர்கள் வழிப்போக்கரைக் கொன்று, அவர்களின் பிணங்களைக் கற்களைக் கொண்டு மூடி வைப்பர். பார்ப்பவர்களுக்கு அச்சம் தரும் கற்குவியலில் இருந்து கூர்மையான அலகினையும் சிவந்த வாயினையும் உடைய ஆண்பருந்துகள் ஒன்றாகக் கூடிப் பிணங்களின் தலைகளைப் பெயர்த்து, கண்களைத் தோண்டி எடுத்துப் பெண்பருந்துகளுக்கு உணவாகக் கொடுக்கும். இச்செய்தியினை,

"கடுத்தது பிழைக்குவது ஆயின், தொடுத்த
கைவிரல் கவ்வும் கல்லாக் காட்சி,
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்,
வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்
ஆள்அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை
கூர்நுதிச் செவ்வாய் எருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ
மல்லல் மொசிவிரல் ஒற்றி, மணிகொண்டு,
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும் ஆங்கண்
கழிந்தோர்க்கு இரங்கும் நெஞ்சமோடு
ஒழிந்துஇவண் உறைதல் ஆற்று வோர்க்கே."
(அகம் 215:7 – 17)

என்ற பாடல் வரிகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆறலைக் கள்வராகிய வேடர்கள் தம் அம்பினால் கொன்ற வழிப்போக்கரின் உடல்களை இலை தழைகளாலும் கற்களாலும் மூடி வைத்தனர். பாழடைந்த கள்ளிகள் நிறைந்த களர் நிலத்தில் திரண்டு குவிந்திருந்த அக்கற்குவியல்கள் நினைப்போர் நெஞ்சங்களை நடுங்கச் செய்யும் தன்மை கொண்டது. அத்தகைய யாரும் துணிந்து செல்ல இயலாத கொடிய பாலை நிலத்தினைத் தலைவர் கடந்து சென்றுள்ளான் என்ற செய்தியை,

"கொடுவிற் கானவர் கணையிடத் தொலைந்தோர்
படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கைக்
கள்ளியம் பறந்தலைக் களர்தொறும் குழீஇ,
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை
வெஞ்சுரம் இறந்தனர்"
(அகம் 231: 5 – 9)

என்ற அடிகள் பகர்கின்றன.

இவ்வாறு பருந்துகள் உலாவும் இடத்திலும் கள்ளிகள் நிறைந்த களர் நிலத்திலும் இலை தழைகளாலும் கற்களாலும் பதுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை இப்பாடல்களின் வரிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

**பதுக்கையின் அமைப்பு:**

பாலை நிலத்தில் இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பள்ளம் தோண்டி, இலை தழைகளால் மூடிய கற்குவியல்கள் காணப்பட்டன. அக்கற்குவியல்கள் கயிற்றால் கட்டப்பட்ட கரிய கேடயங்களின் வரிசையினைக் கண்டால் போன்று இருக்கும் என்று பதுக்கையின் அமைப்பினை,

"கழிப் பிணிக் கறைத்தோல் நிரை ண்டன்ன
உவல் இடு பதுக்கை ஆள் உகு பறந்தலை"
(அகம் 67: 13 - 14)

என்ற அடிகள் பகர்கின்றன.

மூங்கில்கள் வளர்ந்திருக்கும் இடத்திலே நடந்த போரில் வெண்மையான முனையை உடைய அம்பு வேகமாகச் செலுத்தினமையால் வீழ்ந்தோர் எண்ணில் அடங்கார். அவர்தம் உடல்களை தழையிட்டு மூடி மறைக்கப் பெற்ற கற்குவியல்களை உடைய பதுக்கைகள் எழுப்பப்பட்டன. அத்தகைய அருஞ்சுரம் ஆறலைக் கள்வர் வயப்பட்டன அதனை அறிந்து அஞ்சி அச்சுரவழியில் செல்வோர் யாவரும் செல்லாது போயினர். இதனை,

"................................... கழைவளர் நனந்தலை
வெண் நுனை அம்பின் விசை இட வீழ்ந்தோர்
எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கைச்

சுரம் கெழு கவலை கோட்பால் பட்டென
வரம்புகுச் மடிந்த அத்தம் இறந்தோர்"
(அகம் 100: 6 - 10)

என்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய இலை தழைகளால் மூடிய கற்குவியல்களை எழுப்பிய செய்திகளை அகநானூற்றில் பாலைத் திணையில் கூறப்பட்டுள்ளன.

**பதுக்கை தங்குமிடம்:**

வழிப்போக்கர்கள் பதுக்கையின் நிழலில் வளர்ந்துள்ள முட்களைக் கொண்ட கள்ளிச் செடியின் அடியில் தங்கிச் சென்ற நிகழ்வினை.

"பதுக்கைத்து ஆய செதுக்கை நீழல்
கள்ளி முள் அரைப் பொருந்தி, செல்லுநர்க்கு
உறுவது கூறும்"
(அகம் 151: 11 - 13)

என்ற அடிகள் எடுத்து இயம்புகின்றன. கரிய நிறமான கொம்புகளை உடைய ஆண்மான்கள் உயர்ந்த கற்குவியல்கள் கொண்ட பதுக்கைகளில் தங்கிக் கிடந்த செய்தினை.

"....................................இருங்கேழ்
இரலை சேக்கும், பரல் உயர் பதுக்கை"
(அகம் 91: 9 - 10)

என்ற வரிகள் காட்டுகின்றன. இவ்வாறு வழிப்போக்கர்கள் மற்றும் ஆண்மான்கள் தங்கிச் செல்லும் இடமாக பதுக்கைகள் அமைந்துள்ளமையை அகநானூற்றுப் பாடல்கள் தெரியப்படுத்துகின்றன.

**களவுத் தொழிலுக்குரிய இடம் பதுக்கை:**

பரல் உயர்ந்த கற்குவியல்களைக்(பதுக்கைகள்) கொண்ட இடமானது அஞ்சாமையுடைய மழநாட்டார் உழவுத் தொழில் போல களவுத் தொழில் செய்தற்குரிய இடமாக அமைந்தது என்பதை,

"........................ பரல் உயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவு உழவு எழுந்த"
(அகம் 91: 10 - 11)

என்ற அடிகள் எடுத்துக் காட்டுகின்றன. பதுக்கை அமைந்த இடத்தில் உழவுத் தொழிலை ... களவுத் தொழில் நடைபெற்றது ... இவ்வடிகள் நமக்குப் பறைசாற்றுகின்றன.

**பதுக்கைக்கு அருகில் கோங்க மரம்:**

சிவந்த கண்களையுடைய வீரர்கள் வில்கொண்டு எறிந்ததினால் வீழ்ந்த பகைவீரர்களின் பதுக்கையின் அருகில் கோங்க மரம் நின்ற செய்தியினை,

"..............................செங்கண் ஆடவர்
வில் இட வீழ்ந்தோர் பதுக்கை கோங்கின்
(அகம் 157: 4 - 5)

என்ற வரிகள் சுட்டுகின்றன

**பதுக்கை வழிபாடு:**

வெட்சி வீரரை வீழ்த்திய கரந்தை வீரர்கள் பதுக்கை வழிபாடு செய்தனர் என்பதை,

"வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்"
(அகம் 35: 7)

என்ற அடி காட்டும். இவ்வடியில் பதுக்கைக் கல்லில் கடவுள் உறைதலால் பதுக்கைக் கடவுள் என்றனர். மேலும், பதுக்கைக்கு அருகில் நடுகல் வழிபாடும் நடைபெற்றது. இதனை,

"நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,
தோப்பிக் கள்ளோடு துரூஉப் பலி
கொடுக்கும்"
(அகம் 35: 8-9)

என்ற வரிகளில் கூறுகின்றன. அதாவது நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்கு மயில் தோகைகளைச் சூட்டினர்; துடியை முழக்கினர்; நெல்லால் ஆக்கிய கள்ளோடு செம்மறி ஆட்டுக்குட்டியைப் பலி கொடுத்தனர்.

ஆறலைக் கள்வர் வில்லினால் கோத்து எய்த அம்பினால் இறந்துபட்ட வழிப்போக்கர்களின் உடலை உயர்ந்த கற்குவியல்களைக் கொண்டு மூடுவர். இக் கற்குவியல்களில் காட்டு மல்லிகை படர்ந்து காணப்படும். இம்மல்லிகையின்

...கொண்டு நடுகல்லின் நாட்பலிக்கு
...செய்தனர் இதனை,

"...ட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்"
(அகம் 289: 1 - 3)

...அடிகள் கூறுகின்றன.

...பதுக்கைக்கு அருகில் நடுகல் நடப்பெற்று வழிபாடு செய்யப்பட்டமையை இப்பாடல் எடுத்து இயம்புகின்றது.

தொகுப்புரை:

1) பதுக்கைக்குரிய சொல்விளக்கத்தினை நிகண்டுகளும் அகராதிகளும் தெரிவிக்கின்றன.

2) சங்க இலக்கியப் பதுக்கைகளுக்கும் தொல்லியலாளர்களால் சுட்டப்படும் பதுக்கைகளுக்கும் மிகுதியான வேறுபாடுகள் உள்ளன.

3) சங்க இலக்கியப் பதுக்கைகள் பரல் பதுக்கைகள். தொல்லியல் கூறும் பதுக்கைகள் கற்பலகைப் பதுக்கைகள் ஆகும்.

4) பதுக்கை தொடர்பான செய்திகள் அகநானூற்றில் களிற்றியானை நிரையிலும் மணிமிடைபவளத்திலும் கூறப்பட்டுள்ளன.

5) பருந்துகள் உலாவும் இடமும் கள்ளிகள் நிறைந்த களர் நிலமுமான பாலை நிலத்தில் பதுக்கைகள் இலைதழைகளால் மூடிய கற்குவியல்களாக அமைக்கப்பட்டிருந்தன.

6) பதுக்கை வழிப்போக்கர்கள் மற்றும் ஆண்மான்கள் தங்கிச் செல்லும் இடமாகவும், களவுத் தொழிலுக்குரிய இடமாகவும் அமைந்தன.

7) பதுக்கைக்கு அருகில் கோங்க மரம் நின்ற செய்தினையும் அகநானூற்றுப் பாடல் வரிகள் சுட்டிச் செல்கின்றன.

8) பதுக்கை வழிபாடும், பதுக்கைக்கு அருகில் நடுகல் நடப்பெற்று வழிபாடு செய்யப்பட்டமையையும் அகநானூற்றுப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.